1975 நவம்பர் 7]

மாயூரம் நகரில் நுகர்பொருள் கழகக் கடைகள்.

வினு 55—

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அத்தியாவசியப் பொருள்களை வழங்கிடும் சிவில் சப்ளை டெப் போக்கள் மாயூரம் நகரில் தற்போது எத்தனை திறக்கப்பட்டுள்ளன ?

(இ) மேலும் அதிக டெப்போக்களைத் திறந்திட அரசு உத்தேசித் துள்ளதா ?

விடை—

(அ) தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் கழகம் மூன்று மாதிரிக் கடைகளை மாயூரம் நகரில் திறந்துள்ளது.

(இ) இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள் – விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்டமுன் வடிவுகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/75) மற்றும், தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 55/75) 5—11—1975 ஆம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பரிந்துரை எதுமின்றி நிறைவேற்றப் பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. டென்னிஸ் அவர்களும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருவார்கள்.

THIRU K. T. K. TANGAMANI : Sir, before it is taken up I would like to know whether any adjournment motion is being taken up to day.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : லேபர் மினிஸ்டர் இல்லே. இன்றைக்கு எடுத்துக் கொள்வதாக இருந்தது, ஆனால் அவர் வரவில்லை.

THIRU K. T. K. TANGAMANI : Sir newspapers have published a report that the judgment of the Supreme Court is likely to be pronounced to-day. May I know whether it will be conveyed to the House as soon as it is delivered.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேப்பரிலே பார்த்துக்கொள்ள வேண்டியதுதான், ரேடியோவிலே கேட்டுக் கொள்ள வேண்டியது தான்.

(3) கவன ஈர்ப்பு

(அ) சென்னை நகரில் பரவிவரும் புதிய வகை கண் நோய் குறித்தும் அதற்கான உடனடி மருத்துவ வசதிகள் குறித்தும்

THIRU N. K. PALANISAMY : Sir, I call the attention of the Hon. Minister for Health, to a matter of urgent public importance, namely, the prevalence of a peculiar eye disease in the City of Madras and the need to provide immediate medical facilities.

THIRU N. DENNIS : Sir, I wish to call the attention of the Hon. Minister for Health, to a matter of urgent public importance, namely, the prevalence of a peculiar eye disease in the City of Madras and the need to provide immediate medical facilities.